www.tamilarangam.net

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
EELAM PEOPLE'S INFORMATION CENTRE
★EPIC

பிரான்சு பிரிவு

# கொலைகாரப் புலிகள் இங்கேயே இருக்கிறார்கள்!

— பிரேம சந்திரன் பேட்டி

**பத்மநாபாவிற்குப் பிறகு ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் பிரேம சந்திரன் (33). மார்க்சிய சித்தாந்தத்தில் ஈடுபட்டுள்ள இந்த அமைப்பினர் அக்கட்சி வழக்கப்படி கட்சியின் பொதுச் செயலர்ளரே சிதைக்கு எரியூட்ட வேண்டும் என்பதால் நெருக்கடியான நேரத்தில் இவரை ஏகமனதாக தேர்ந்தெடுதனர். யாழ்பாணத்திலிருந்து இலங்கை பார்லிமெண்ட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரேமசந்திரன் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினராக இருந்தவர். 'பாலஸ்தீன கொரில்லா' யுத்த பயிற்சி பெற்ற இவருக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே எல்.டி.டி.ஈ.யினர் மரண தண்டணைவிதித்துள்ளனர். இவருடையு சமீப கால நடவடிக்கைகளைப் பார்க்கும்போது பத்மநாபாவைவிட இவர் முற்றிலும் மாறுபட்டவர் என தெரிகிறது.**


*நடந்த படுகொலைகளுக்கு தாங்கள் காரணமல்ல என்றும், உங்கள் அமைப்பிலேயே உள்ள கோஷ்டி — பூசல்கள்தான் காரணம் என எல்.டி.டி.ஈ. அறிக்கை விட்டு மறுத்துள்ளதே?*

அவர்கள் செய்த எந்த படுகொலையை பொறுப்பேற்றிருக்கிறார்கள். சிறீ. சபாரத்தினத்தை கொன்ற போதும் சரி, அமிர்தலிங்கத்தைக் கொன்றபோதும் சரி பழியை மற்றவர்கள் மீது போட்டு தப்பிக்க நினைத்தவர்கள்தானே! தமிழகத்திலுள்ள சில அரசியல் கட்சி தலைவர்களில் சிலரும் கூட புலிகள் செய்திருக்க மாட்டார்கள் என்றனர். ஆனால், பின்னர் இவர்கள் முகத்தில் கரியை பூசுவதுபோல் நாங்கள் தான் செய்தோம் என்றனர் புலிகள். மக்கள் கோபத்தில் இருக்கும்போது மறுத்துவிட்டு, அது தணிந்ததும் வெற்று வீரம் பேசுவதுதான் புலிகளின் ஆண்மை.

முக்கியமாக எல்.டி.டி.ஈயும், இரண்டாவதாக அதற்கு உறுதுணையாக தமிழகத்திலுள்ள சில சக்திகளும் திட்டமிட்டே நடத்தியதுதான் இந்த படுகொலைகள். வழக்கம்போல் பழியை எங்கள் அமைப்பில் திசைதிருப்ப உட்கட்சி பிரச்னை என்றனர். ஆனால், இம்முறை அவர்கள் உப்பு விற்க புறப்பட்ட போது மழை பெய்து கரைந்துவிட்டது. புலிகளை சிக்கலிலிருந்து காப்பாற்ற இங்குள்ள சில தமிழ் பத்திரிகைகளும் பொய் என்று தெரிந்தே அநாகரிகமாக எழுதுகிறார்கள். மக்கள் இதை நம்ப தயாராக இல்லாததால் புலிகளோடு சேர்ந்து இவர்களின் சாயமும் கலைந்துவிட்டது.

எமது இயக்கத்தில் கோஷ்டிகளோ, பூசல்களோ கிடையாது என்பது திட்டவட்டமானது. இது எமது எதிரிகளுக்கும் தெரியும். எலும்புத் துண்டுகளுக்காக புலிகளிடம் விலைபோன எழுதுவோருக்கும் தெரியும். தெரிந்தே வேண்டுமென்று வாஙகுய காசுக்கு விஷம பிரசாரம் செய்கின்றனர்.

பத்மநாபாதான் இயக்கத்துக்கு செயல் தலைவராக் இருந்தார். வடக்கு — கிழக்கு மாகாண அரசு




பிரேம சந்திரன்

அமைந்தபோது அவரே முதல்வராகியிருக்க முடியும். ஆனால் அவர் வரதராஜ பெருமாளைத்தான் அறிமுகப்படுத்தினார். எங்களுக்குள் மோதல் என்பது புனையப்பட்ட கருத்து.

பத்மநாபா கொலையுண்ட அன்று மதியம் சுமார் இரண்டரை மணிக்குத்தான் சென்னைக்கே வந்தார். அவரது மனைவியும் வந்தார். உண்மை இப்படியிருக்க அன்றைக்கு காலையிலேயே வரதராஜப்பெருமாள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிணங்களின் அணிவகுப்பு

அனுப்பியதாக சிலர் வந்ததாக எப்படி கூற முடியும், ஆனந்தியும் அப்படி கூறவில்லை. அவர் பேசும் நிலையிலேயே இல்லை. பத்மநாபாவை அவர்கள் சந்தித்தாகவும், மாலை வரச்சொன்னதாகவும் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் வதந்தியை உருவாக்கி, பிரச்னையை திசைதிருப்ப முயற்சித்தன.

பத்மாநாபாவிற்கு பிறகு நானும் பொது செயலாளராக ஏகமனதாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். இதில் வரதராஜ பெருமாளுக்கும் விருப்பம் உண்டு. வரதராஜ பெருமாளால் இன்றைக்கு எங்களோடு முழுமையாக 'பிஸிகலாக' பணியாற்ற முடியாவிட்டாலும், அவருடன் தொடர்ச்சியாக பேசி அவரது ஆலோசனையையும் கேட்டுத்தான் செயல்பட்டு வருகிறோம். புலிகளைப் பற்றி உண்மைகளை எழுதினாலே அவர்கள் தமிழக மண்ணிலேயே மிரட்டப்படுகிறார்கள். எங்களைப் பற்றி அவதூறு செய்தாலும் நாங்கள் ஜனநாயகவாதிகள், வன்முறையை விரும்பாதவர்கள் என்ற நம்பிக்கை அவர்கள் விஷம பிரசாரம் செய்ய வழி வகுத்திருக்கலாம்.

**சம்பவத்திற்கு காரணமாக புலிகளைத் தவிர வேறுயாரையாவது சந்தேகப்படுகிறீர்களா...?**

பத்மநாபா கொலைக்கு பின்னணி வெறும் எல்.டி.டி.ஈ மட்டுமே காரணமல்ல. ஆரம்ப காலத்திலிருந்தே அவர்களுக்கு வெளிநாட்டு சக்திகளோடு தொடர்பிருந்தது. இந்த படுகொலையை பொருத்தவரை — இதற்கு உறுதுணையாக தமிழகத்தில் பல்வேறு மட்டத்திலுள்ள பல சக்திகள் ஒத்துழைப்பாக — உறுதுணையாக இருந்துள்ளன என்பதை உறுதியாக நம்புகிறோம்.

பத்மநாபா இங்கு வந்திருக்கும் செய்தியை அவர்கள் புலிகளுக்கு தெரிவித்துதான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது. இந்த சதி திட்டத்தை சென்னையிலே ஒரு இடத்தில் அமர்ந்துதான் திட்டமிட்டுள்ளனர். தமிழகத்தில் உள்ள தீயசக்திகள் புலிகளுக்கு உதவாவிடில் 24 மணி நேரத்திற்குள் யாழ்பாணத்திற்கு தகவல்கிட்டி, அவர்கள் அங்கிருந்து படகு மூலம் தஞ்சை வந்து, தஞ்சையிலிருந்து சென்னைக்கு வந்து வீட்டில், மாடியில் இத்தனை மணிக்கு இருப்பார் என அறிந்து, கொலை செய்துவிட்டு, தப்பிப் போயிருக்க முடியாது. இன்னும்கூட அவர்கள் சென்னையிலோ, புறநகர்களிலோ தீயசக்திகளின் பாதுகாப்பில்தான் இருக்க முடியும். தப்பிப் போய்விட்டார்கள் என்பதெல்லாம் வழக்கை திசைதிருப்ப நடத்தும் நாடகம்.

கொலைக்கு பின்னணியாக பல்வேறு சக்திகள் இருப்பது மறுக்க முடியாத உண்மை. எல்.டி.டி.ஈ. யினர் எதிர்காலத்தில் தமிழகத்திற்கே பிரச்னைக்குரியவர்களாக ஆவார்கள். எல்.டி.டி.ஈ. யினர் முழு சந்தர்ப்பவாதிகள். காரியம் ஆகவேண்டுமனால் யார் காலையும், எந்த நேரத்திலும் பிடிப்பார்கள். வேண்டாத வேளையில் அதே காலை வாரிவிடவும் தயங்கமாட்டார்கள். இது அவர்களுடைய கடந்தகால வரலாறு கூறும் உண்மை.

**இலங்கையில் அரசுக்கும் — புலிகளுக்கும் இடையே நடக்கும் யுத்தம் பற்றி என்ன நினைக்கறீர்கள்?**

அது மக்களுக்கான போராட்டம் என்றா கருதுகிறீர்கள்? நிச்சயமாக இல்லை. முதலாவதாக புலிகளுக்கு எதற்காக இலங்கை அரசோடு மோதுகிறோம் என்பதே தெரியாது. அதற்கான பதில் அவர்களிடம் இருக்குமா என்பது சந்தேகம். மட்டக்களப்பில் புலிகளின் ஆதரவாளரான முஸ்லிம் ஒருவருக்கும் — போலீஸ் ஒருவருக்குமான தகராறு. இதுதான் யுத்தம் மூண்டதற்கான காரணம் என அவர்களே கூறுகின்றனர். இவர்கள்தான் தமிழகம் வந்து இலங்கை தமிழர்களை மட்டுமின்றி தமிழக தமிழர்களை சுட்டுவிட்டு ஓடியிருக்கின்றனர்.

இரண்டு தனிப்பட்ட ________ நபர்களுக்காக இவ்வளவு பெரிய சண்டையை துவக்கி பெரிய இழப்புகளை உருவாக்கியுள்ள புலிகளின் செயலையும் அதற்கு காரணமான தலைமையையும் என்னவென்று சொல்வது. அவமானம், அவமானம். அரசியல் ஞானத்திற்கும் — விவேகத்திற்கும் — புலிகளுக்கும் எந்தகாலத்திலும் சம்மந்தமிருந்ததில்லை. ஒரு மாஃபியா கும்பலாகத்தான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு முதலில் தங்களை தாக்கினால் அதை வைத்து உலக அரங்கில் இன ஒடுக்குமுறையாக சித்தரிக்கலாம் என எதிர்பார்த்தனர். பிரேமதாசாவும் இதை உணர்ந்து தாக்குதலை புலிகளாக தொடரட்டும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என இருந்தார். நடக்கும் சண்டையினால் அப்பாவி மக்கள் உயிர், உடமைகளை இழந்துள்ளனர்.

வடக்கு — கிழக்கு மாகாணம் எங்கள் கட்டுப்பாட்டில் என, ஐ.பி.கே.எஃப் வெளியேறியதும் புலிகள் டமாரம் அடித்தனர். இப்போது யாழ்ப்பாணம், குரா பகுதிகளைத் தவிர எல்லா இடங்களிலும் பின்ன டைவு. கிழக்கு மாகாணத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதாக இலங்கை அரசே அறிவித் துள்ளது. கிழக்குப் பகுதியிலிருப்போரை வடக்கு பகுதிக்கு விரட்டுவதுதான் இலங்கை அரசின் தந்திரம்.



கதறும் பத்மநாபா மனைவி

இலங்கை அரசிடம் இழந்து போன பகுதிகளை மீட்கவே புலிகளிடம் ஆற்றல் இல்லை. கிழக்கு பகுதியிலிருந்து வடக்கு பகுதிக்கு பின் வாங்கி ஓடுகின் றனர். தற்போது மட்டகளப்பு பகுதியிலிருந்து பின் வாங்கி காட்டுக்குள் ஓடிக் கொண்டிருப்பவர்களால் தொடர்ந்து இலங்கை அரசோடு மோத முடியாது. இலங்கை அரசு தமிழகத்திலுள்ள தற்போதுள்ள சூழ் நிலையையும், இந்திய அரசின் போக்கையும் வைத்துக் கொண்டு வேகமாக புலிகளை ஒடுக்குவதில் இறங் கியுள்ளது.

இதனால் இன்னும் கொஞ்ச நாளில் புலிகள் யாழ் பாணத்திலிருந்தும் காட்டுக்குள் பின் வாங்கி ஓட வேண்டிய வரும். கை வசம் இருந்த பகுதிகளையே மீட்க முடியாத இவர்கள் யாழ்பாணத்துக்கே போ ராடிக் கொண்டிருப்பார்கள். தனி ஈழத்தை எங்கிருந்து பெற்றுத் தரப் போகிறார்கள். இலங்கை அரசிடம் பேச்சு வார்த்தை என மண்டியிடவும் தயாராகி விட் டனர். மிஞ்சினால் கெஞ்சுவதும், கெஞ்சினால் மிஞ்சு வதும் புலிகளுக்கு வாடிக்கை.

இவர்கள் மக்களுக்காக எந்த காலத்திலும் போராடிய தில்லை. பாலசிங்கம், யோகி, மாத்தையா ஆகியோர் கொழும்பில் பிரேமதாசாவை மூன்று மணி நேரம் சந்தித்து பேசினர். அச்சந்திப்பில் மக் களுக்காக எதையும் கேட்கவில்லை. சிங்கள குடியேற் றத்தை எதிர்த்தோ, மாகாண உரிமைகளுக்கோ பேசவில்லை. மாறாக மாகாண அரசைக் கலை. தேர்தலை வை என்றனர். பதவி வெறியில் பித்துப் பிடித்து அலைகிறார்கள்.

இந்தியாவில் மத்திய அரசு நினைத்த மாத்திரத்தில் மாநில அரசை கலைத்து விட முடியும். இலங்கை அரசியல் சட்டப்படி மாகாண முதல்வரின் சம்மதமும் அதற்கு தேவை. இதனால் இலங்கை அரசிடம் அரசியல் சட்டத்தையே திருத்த வற்புறுத்தினார்கள். தாங்கள் பதவிக்கு வரும் போது இலங்கை அரசு அதே சட்டத்தை வைத்து புலிகளின் ஆட்சியைக் கூட உடனே கலைத்து விட முடியும் என்ற தொலைநோக்கு பார்வை இல்லாமல் எப்படியாவது ஈ.பி.ஆர்.எல். எஃப்.பை ஈழ அரசியலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்; அதை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே புலிகள் செயல்படுகின்றனர்.

ஏனெனில் தங்களது பாசிச நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும், அரசியல் ரீதியாக ஜனநாயக அமைப் பாக இலங்கை மக்கள் எமது இயக்கத்தையே அங்கீ கரிப்பதையும், புலிகளை மக்களிடம் அம்பலப்படுத்தும் ஆற்றல் எமக்கே உண்டு என்பதாலும் எங்களைப் பார்த்து பயப்படுகினறனர். புலிகள் மக்கள் நம்பிக் கையை இழந்து நாளாகிறது. தொடர்ந்து ஆயுதம் மூலம்மாகவே அவர்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்பதையும் உணர்ந்து விட்டனர். மாற் றாக மக்கள் எமது இயக்கத்தை வரவேற்கக் கூடும் என்ற கருதியே சென்னை வந்து இந்த படுகொலையில் இறங்கியுள்ளனர்.

**ஈழத்தில் புலிகளுக்குத்தான் செல்வாக்கு அதிகம் என்பதில் உங்கள் கருத்து என்ன?**

ஈழத்தில் புலிகளுக்கு செல்வாக்கு இருப்பது உண்மை யென்றால் – அது நிரந்தரமானது என அவர்கள் உணர்ந்திருந்தால்-ஏன் தமிழகம் வந்து பத்மநாபாவை சுட்டுக் கொல்ல வேண்டும். அங்கு புலிகள் செல்லாக் காசாகி விட்டதினால் வேறு மாற்றில்லை என்ற அரசியல் கட்டாயத்தை உருவாக்க கருதி இந்த படுபாதகத்தை செய்துள்ளனர். ஆனால் இதிலேயும் அவர்கள் நினைத்தது ஒன்றாகவும், நடந்தது வேறொன்றாகவும் ஆகி விட்டது. சர்வதேச அளவில் புலிகள் அம்பலப்பட்டு விட்டனர். ஈழ மக்கள் தமிழக மக்களின் நிரந்தர எதிரிகளாகி விட்டனர் மரணப் பிடியில் இருக்கும் அவர்களுக்கு எந்த ஆதரவும் இல்லாத தற்போதைய நிலைமையே இதற்கு உதாரணம்.

**அகதிகளை தவிர்த்த மற்ற போராளிகளை தமிழகத்தில் அனுமதிப்பதா ? — , வேண்டாமா ? என அரசு யோசிப்பதாக தமிழக முதல்வர் கூறியிருக்கிறாரே?**

முதலாவதாக ஒரு விஷயத்தை தெளிவாக சொல்ல விரும்புகிறோம். கலைஞர் விரும்புவது போல், ஈழ மக் கள், தமிழக மக்கள் விரும்புவது போல் எங்களுக்கும் சகோதர யுத்தத்தில் கொஞ்சமும் விருப்பம் கிடை யாது. இதனால் எங்களுக்கு மட்டுமல்ல அங்குள்ள மக்களுக்கும் சரி எந்த பயனும் கிடையாது. சகோதர யுத்தத்தில் ரத்தக் களரி ஏற்படுவதில் எங்களுக்கு உடன்பாடு இல்லாததால்தான் நாங்கள் எங்கள் தோழர்களோடும், குடும்பத்தோடும் இந்தியாவில் அடைக்கலம் புகுந் தோம். எங்களால் ஆயுத பலத்தோடு இலங்கையிலேயே இருந்திருக்க முடியும். புலிகளோடு மோதியிருக்க முடியும். ஆனால் எங்களுக்கு நோக்கம் அதுவல்ல.

இங்கு நாங்கள் கேட்டது, கேட்பதெல்லாம் ஒரிசாவில் படிப்பு வசதியில்லாமல், மருத்துவ வசதி யில்லாமல், பாஷை பிரச்சனையோடு இருக்க முடிய வில்லை. திருச்சி, மண்டபம் முகாம்களில் வைத்து தொழிற் பயிற்சி தாருங்கள் என்றதுதான். ஆனால் அரசோ சிறையில் வைத்தது. இது எங்களை கிரிமினல் சிந்தனைக்கு கொண்டு செல்லவே உதவும். இன்றைக்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் சரி புலிகளை பிடிப்பதாக சொல்லிக் கொண்டு சாதாரண இளைஞர்கள்தான் கைது செய்யப்படு கிறார்கள்.

ஏற்கனவே அரசு தரப்பில் புலிகள் தமிழகத்தில் இல்லை என்று கூறிவிட்ட காரணத்தால் அதை நிஜமாக்க புலிகள் கண்டு கொள்ளப்படுவதில்லை. எல்.டி.டி.ஈ. மாநிலத்தில் தங்களுக்குள்ள தொடர்பு களை வைத்து தலைமறைவாகின்றது

போராளிகளை அப்புறப்படுத்துவது என்பது எங்களை மீண்டும் ஈழ மண்ணிற்கு அனுப்புவதாகத்தான் இருக்க முடியும். அது மீண்டும் அங்கே முதல்வரும், தமிழக மக்களும் விரும்பாத சகோதர யுத்தத்திற்குத் தான் வழி வகுக்கும். இந்த தவறை மத்திய அரசும், மாநில அரசும் செய்யாது என்றே நம்புகிறோம்.

*தமிழக மக்களின் ஆதரவை ஒட்டு மொத்த போராளி இயக்கங்களும் இழந்து விட்டன என்பதை தெரிந்திருக்கிறீர்களா?*

அது குறித்து ஆழ்ந்த கவலையோடு இருக்கிறோம். குற்றவாளிகளை இனம் பிரித்து பார்க்கும் அளவிற்கு மக்களுக்கு விவரம் தெரியாது என்பது உண்மை. போலீஸ் உயரதிகாரிகளே எங்களையும் புலிகள் என்று அழைக்கும் போது சாதாரண மக்களுக்கு இது புரிந் திருக்க வாய்ப்பில்லைதான்.

ஈழ விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே ஆயுதத்தின் மூலம் வென்றெடுத்து விடக் கூடியதல்ல. அக — புற சூழ்நிலைகளும் முக்கியம். எங்களைப் பொறுத்த வரை எங்கள் போராட்டத்துக்கு இந்திய அரசின் ஆதரவும், அனுசரணையும் மிக அவசிய மானது என கருதுகிறோம். சர்வ தேச நாடுகளின் ஒத் துழைப்பு இல்லாமல் எங்களின் இலட்சியத்தை வென் றெடுக்க முடியாது என்பதை தெரிந்திருக்கிறோம்.

அதிலும் முக்கியமாக தமிழக அரசு — தமிழக மக் களின் 'உணர்வபூர்வமான ஆதரவே எங்களுக்கு சகலவிதமான ஆற்றல்களையும் வழங்கக் கூடியதாக இருந்து வந்திருக்கிறது. இத்தனை காலம் நாங்கள் யார் யாரையெல்லாம் எமது இலட்சியத்தை அடைய உதவும் நண்பர்களாக சம்பாதித்து வைத்திருந்தோமோ அவைகளையெல்லாம் புலிகள் தங்கள் அராஜகங் களால் எதிரிகளாக்கி விட்டனர். அதில் முக்கிய மானது இந்திய அரசும் — தமிழக மக்களும். இருவரையும் புலிகள் வெறுப்பேற்றி, ஆத்திரமூட்டி யுள்ளனர். மீனவர்களை கடத்தியது; தாக்கியது; இந்திய அரசை விமர்சித்தது; என பல சம்பவங்கள். இது எங்களுடைய பயணத்தை மிகவும் பின்னடையச் செய்து விட்டது என்பது உண்மை. இவர்களை மீட் டெடுக்க மிக்த சிரமங்களை இனி எதிர் நோக்க வேண்டி யிருக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பத்து, இருபது பேர் இலங்கையில் கொல்லப்பட்ட போது தமிழகம் கொந் தளித்தது. கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள் எத்தனை யெத்தனை... இலங்கை அரசு பயந்து பின் வாங் கியது. இன்றைக்கு இரண்டு லட்சம் பேர் வீடிழந்து, ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் சின்ன எழுச்சி கூட தமிழக மக்களிடம் இல்லை என்பதை மறுக்கவில்லை. இது எங்களுக்கு அதிர்ச்சியளித்தாலும் குற்றம் எங்கள் போராட்ட சக்திகளிடம் இருக்கிறது என்பதை நினைத்து வெட்கப்படுகிறோம். இதற்கு முழு காரண மும் புலிகள்தான். ஏழு வருடக்கால போராட்டத்தின் வளர்ச்சியா? வீழ்ச்சியா? என கூற முடியவில்லை. இன்றைக்கு இதனால் புலிகளே பாதிக்கப்பட்டுக் கொண் டிருந்தாலும் அதற்காக நாங்கள் வருத்தப்படாமல் இருக்க முடியாது. தமிழக மக்கள் ஆதரவு கை விட்டுப் போனது எங்களுக்கு ஈடு செய்ய முடியாத மிகப் பெரிய இழப்பு. தமிழக மக்கள் எதிர்ப்பில்லாத



பிரபாகரன்

போது அரசும் அமைதி காக்கும். அது இலங்கை அரசின் கை உயர காரணமாகி விடுகிறது. இதன் பலனை புலிகள் இன்று அனுபவித்த பின் உணர்ந் தாவது தங்களை திருத்திக் கொள்வார்களா!

*ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புடன் இலங்கை அரசு பேச்சு வார்த்தை நடத்துவதுதான் புலிகளின் கோபத்திற்கு காரணம் என்று சொல்லப்படுகிறதே?*

இதென்ன அநியாயம். இதில் அர்த்தமேயில்லை. எல்.டி.டி.ஈ. ஈழத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் பிரதிநிதி என்றால் இன்னொரு சாரரின் பிரதிநிதி நாங் கள். ஏழு பார்லிமெண்ட் உறுப்பினர்கள் இருக்கி றோம். அரசோடு நாங்கள் பேச்சு வார்த்தை செய் வதை அரசே கூட மறுக்க முடியாது. நாங்கள் அரசோடு பேசுவது கண்டு இவர்கள் ஏன் பயப்பட வேண்டும். எல்.டி.டி.ஈ. பலமாக இருக்கும் பட்சத்தில் நாங்கள் அரசோடு பேசுவதை பார்த்து அவர்கள் பயப்பட தேவையில்லையே! புலிகள் தங்களின் அந்திம காலத்தில் இருப்பதால் மற்ற அமைப்புகளையும் அப்படி ஆக்கிவிட நினைக்கிறார்களோ!

*பத்மநாபா இல்லாத நிலையில் அமைப்பு என்னவிதமான நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்?*

இயக்கத்தைப் பொறுத்தவரை தோழர் பத்ம நாபாவின் பங்களிப்பு பலமானதாக இருந்தாலும்கூட அவர், தான் வகித்துவந்த இடத்தை வெற்றிடமாக விட்டுவிட்டுச் செல்லும்படி கடந்த காலங்களில் அவர் நடக்கவில்லை. தன் வேலைகளை தனக்குப் பிறகும் தொடர்ந்து செய்வதற்கு ஏராளமான தோழர்களை உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் இருக்கும் போதே 'கலெக்டிவ் லீடர்ஷிப்' இருந்தது. முடிவுகள் எல்லோருடைய விவாதத்திற்குப் பிறகே எடுக்கப் படும். அவரின் இழப்பு எங்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று. ஆனாலும் அதனால் இயக்கம் பாதிப்படையாது.

— இரா. பாஸ்கர்

நன்றி: சாணக்கியன்